முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1146

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

18.11.2022, வெள்ளிக்கிழமை

1. ஞான சித்தியே அரங்கா வாழ்க
ஞானிகள் துணைகொண்ட தேசிகா வாழ்க
தானதர்மத்தின் பலமே அரங்கா
தவசியாய் வாழும் ஞானியே தேசிகா
2. தேசிகனே ஞானச்சுடரேற்றி தேசமெல்லாம்
தெய்வநெறி பரவவேண்டும் என
ஆசிதந்து மக்களை காத்துவரும்
அப்பனே ஐயனே அரங்கனே என் அவதாரமே
3. அவதாரமே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
அருளுவேன் ஞான அறிவுரை ஆசி
(சுபகிருது வருடம் கார்த்திகை மாதம் 02 ம் நாள் 18.11.2022 வெள்ளிக்கிழமை)
அவனியில் உன் அவதாரத்தின் மூலம்
அற்புதம் அகிலம் கண்டு தானே
4. தானாக மக்களுக்கெல்லாம்
தரணியில் உன் தவபலத்தால்
ஞானம் பெருகி இந்த பேருலகில்
நம்பிக்கையான வாழ்வும் உலகோர்க்கு நல்மதிப்பும்
5. மதிப்புகூடிய ஞான தேசமாக
மக்களை காக்கின்ற ஞானபூமியாக
ஜோதி சுடர்வழி உலகமெல்லாம்
சூட்சும சக்தி உன் வேண்டலுக்காய் ஆறுமுகன் அருளுவேன்
6. அருளாக அறமாக உன் தர்மமாக
அனைத்து வழிகளிலும் ஆறுமுகன் யான் உன் வேண்டலுக்காய் இறங்கி
இறங்கி உலகோர்க்கு ஞானம் ஊட்டி
இணையில்லாத ஞான லோகம் படைப்பேன்
7. தானதர்மத்தின் மகா சக்தி நீ
தவசி உன் அவதாரத்தில் உலகமெல்லாம்
வறுமை பிணி துன்பம் என்பதே இல்லாதவண்ணம்
வளமும் பலமும் ஞானசித்தியும்
8. சித்தியோடு கூடிய ஞானவான்களும்
சிறப்பறிவு நிறைந்த ஞானத் தலைவர்களும்
பரதமெங்கும் பரவி இனிதே உலகில்
பாடிடுவேன் ஞான ஆட்சி அரங்கன் உன் தயவால் அரங்கேறும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–